DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | 84/2019 |
| S.O.P. “ | : | |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | ஜோதி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.08.2024

**முதல் விசாரனை:**

நான் மனுதாரர். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். சாக்கோட்டை காவல் நிலையக்குற்ற எண்.211/2017 வழக்கின் முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ1. விபத்து வாகனமான டி.எண்.63 AQ 1725 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ2. விபத்து வாகனமான டி.எண.31வி 1860 வேனுக்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ம.சா.ஆ3. இறந்து போன எனது மகள் வினோதினியின் பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ4. பார்வை மகஜர் ம.சா.ஆ5. வரைபடம் ம.சா.ஆ6. காரைக்குடி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தின் 1 ம் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ7. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை: (3ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர்)**

விபத்தில் இறந்து போன வினோதினி என்னுடைய மகள். அவர் தன் கணவரோடு இருசக்கர வாகனத்தில் செல்லும் போது இந்த விபத்து ஏற்பட்டது. இந்த விபத்து குறித்து போலிஸ்சாருக்கு என் கணவர் தான் தகவல் கொடுத்தார். முதல் தகவல் அறிக்கையில் வெள்ளைச்சாமி கொத்தனார் என்றோ எனது மகள் தையல் வேலை பார்ப்பவர் என்றோ சொல்லவில்லை. எனது மருமகன் வெள்ளைச்சாமி தான் கவனக்குறைவாக ஓட்டிச்சென்று விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அவர் ஓட்டிய இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கததால் இவ்வழக்கு தள்ளுபடிக்கு உரியது என்று சொன்னால் சரியல்ல. விபத்து வெள்ளைச்சாமியின் கவனக்குறைவால் நடந்தது என்பதால் 3-ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எந்த இழப்பீடு வழங்க தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. வேனை ஓட்டிய ஓட்டுநருக்கு போக்குவரத்து வாகனத்தை ஓட்டுவதற்கு உரிய வில்லை இல்லை என்பதாலும், வேனுக்கு விபத்து காலத்தில் தகுதிச்சான்றிதழ் என்பதாலும் காப்பீட்டு விதிகள் மீறப்பட்டு உள்ளதால் 3 எதிர் மனுதாரர் நிறுவனம் எந்த இழப்பீடும் கொடுக்க தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. மனுதாரர்கள் ஆகிய நாங்கள் விபத்தில் இறந்து போன வினோதினியின் பெற்றோர்கள். எங்களுக்கு 4 பெண் குழந்தைகள். நானும என் கணவரும் விருதன்வயல் கிராமத்தில் குடியிருக்கிறோம். எனது மகள் தன் கணவரோடு செங்காத்தான்குடி கிராமத்தில் குடியிருந்து வந்தார். என் மகள் எந்த வேலையும் பார்க்க வில்லை என்பதாலும் நான் அவரை சார்ந்து வாழ வில்லை என்றும் எனவே எனக்கு எந்த இழப்பீடும் கிடைக்ககூடியது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. அவ்வாறு கிடைத்தாலும அன்பு மற்றும் பாச இழப்பிற்க்காக மட்டும் தான் நஷ்ட ஈடு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. நானும் என் கணவரும் விவசாய வேலை பார்த்து வருகிறோம். என் கணவர் வண்டியில் இருந்து விழுந்ததால் வேலை பார்க்க முடியவில்லை. எனவே இந்த மனுவானது 3 ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுப்படி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | 84/2019 |
| S.O.P. “ | : | |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | குமார் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.08.2024

**முதல் விசாரனை:**

நான் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சியாவேன். நான் இத்துடன் தாக்கல் செய்துள்ள நிரூபணவாக்குமூலத்தை முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:(3-ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர்)**

வெள்ளைச்சாமியின் வண்டிக்கு பின்னால் நான் வண்டியில் வந்து கொண்டிருந்தேன். விபத்து நடந்த இடம் சற்றே வலைவான இடம். இறந்து போன வெள்ளைச்சாமி நடு ரோட்டில் கிடந்தார். நாங்கள் பார்க்கும்போது இறந்து கிடந்தார். அவரது மனைவியும் விபத்தில் இறந்து கிடந்தார். அங்கிருந்த ஆட்கள் 108 க்கு போன் செய்தார்கள். போலீஸ் வரும் வரை நான் அங்கு இருந்தேன். சுமார் 1 மணி நேரத்திற்குள் போலீஸ் வந்து விட்டார்கள். மித்ராவயல் ஏம்பல் சாலை ஓர்அளவுக்கு பெரிய சாலை ஆகும். போக்குவரத்தை தடை செய்யவில்லை. வெள்ளைச்சாமி இடது ஓரமாக சென்று இருந்தால் விபத்தை தவிர்த்து இருக்கலாம் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. வெள்ளைச்சாமி விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணிந்து சென்றாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறந்து போன வெள்ளைச்சாமி எனது ஊர் காரர். அவரது

குடும்பத்திற்கு அதிக இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்க்காக மனுதாரருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.